மலர் - 9 மே - 1996 இதழ் - 5

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்




வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்

இடம் :- மணல் மேடு வீதி, ஈரோடு 638002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


பக்கம்

1. மரணத்திற்குப் பின்னே.... 1
2. விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களாவன் 9
3. பெண்கள் பகுதி 14
4. போதிப்பவர்களின் நடத்தை.... ? 18
5. புதிய ஏற்பாட்டு ஆராதனை (11) 21
6. மாணவர் விளக்க உரை - பாடம் - 1 25
7. மனசாட்சி என்றால் என்ன? 30

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 MAY - 1996 ISSUE -5

## ஆசிரியவுரை

# மரணத்திற்குப் பின்னே . . .

ஆரம்பகாலந்தொட்டே மரணம் என்பது மனுக்குலத்துக்கு பெரும் அதிர்ச்சியையும், தாங்க முடியாத துக்கத்தையும் அளவு கடந்த வேதனையையும் கொடுக்கின்ற ஒரு செயலாக இருந்துள்ளது. மரணம் ஒரு மனிதனைச் சந்திக்கும் பொழுது, அவனுடைய செல்வத்தையோ, கல்வியையோ, செல்வாக்கையோ, பதவியையோ, பட்டங்களையோ, சமுதாய நிலையையோ, குடும்பச் சூழலையோ கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. இந்தப் பூவுலகில் மானிடராய் பிறந்த எல்லோருக்கும், எந்த விதமான பேதமும் இல்லாமல் கட்டாயம் சம்பவிக்கும் ஒரு செயல்தான் மரணம். மனிதனுடைய உடல் அமைப்பு, அதன் செயல்பாடு ஆகியவற்றை நாம் உற்று நோக்கினால், அது தேய்ந்து, உருக்குலைந்து, அழிவுக்கு ஏதுவானதாகவே உள்ளது என்பதை நாம் எளிதில் புரிந்து கொள்ளமுடியும். இந்த சரீர அழிவாகிய மரணம் எல்லோருக்கும் நிச்சயம் என்பதைத் தான் எபிரேய ஆசிரியர், "அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே" என்று கூறுகிறார். (எபி 9:27).

சரி, இப்படிப்பட்ட மரணத்தின் மூலமாக, நம்மால் மிகவும் நேசிக்கப் பட்டவர்கள், இரத்தம் கலந்த உறவுகள், ஆருயிர் நண்பர்கள் நம்மை விட்டுக் கடந்து போகும் பொழுது நம்மால் பல கேள்விகள் எழுப்பப்படுவதுண்டு. அவர்கள் இன்னும் வாழ்ந்து கொண்டுள் ளார்களா? (Still in existence). அவர்கள் இன்னும் நினைவுள்ளவர்களாக

இருக்க முடியுமா? (Conscious). அவர்கள் பூமியில் விட்டுச் சென்ற வர்களை காண முடியுமா? பூமியில் என்ன நடக்கிறது என்பதை அவர் களால் அறிந்து கொள்ளமுடியுமா? ஏதாவது ஒரு வகையில் அவர்களோடு தொடர்பு கொண்டு அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியுமா? கர்த்தருக்குள் மரிக்காதவர்களின் நிலையை மாற்ற பூமியிலிருந்து ஏதாவது செய்ய முடியுமா? இப்படி இன்னும் பல கேள்விகள்.

முற்பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்னும் இவர்கள் வாழ்ந்த கால கட்டத்தில் அல்லது அதற்கு முன்னரே வாழ்ந் தவர் என்று கருதப்படுகின்ற பொறுமையின் சின்னான யோபு, "மனிதன் செத்தபின் பிழைப்பாரோ?" என்று வினவுகிறார். (யோபு 14:14). அது மாத்திரம் அல்ல, "மனுபுத்திரன் ஜீவித்து போன பின் அவன் எங்கே?" என்றும் கேட்கிறார். (14:10) திருமதி யோபுவே, "தேவனைத் திட்டி தீர்த்து ஜீவனை விடும்" என்று சொன்ன நிலையிலும், தேவனுக்கு முழுமையாகப் பயந்து அவர்தம் சித்தத்திற்கு தன்னை அர்ப்பணித்த மாமனிதனாகிய யோபு இப்படியெல்லாம் கேள்விகள் எழுப்பியிருந்தாலும், "மரணத்திற்குப் பின் என்ன" என்பதற்கு வேதாகமம் போதுமான அறிவுரை கொடுப்பதாகவே உள்ளது.

மரணத்தைப் பற்றி பூரணமாகத் தெரிந்து கொள்வதற்கு முன். மனிதன் எப்படிப்பட்டவன் என்பதை அறிந்து கொள்வது அவசியம். மனிதன் தேவனுடைய சாயலாகப் படைக்கப்பட்டுள்ளான் தேவனோ ஆவியாயிருக்கிறார். (யோவா 4:24), மனிதனுக்குள்ளாக இருக்கின்ற ஆவி, அழிவில்லாத தன்மையைப் பெற்றிருக்கும் தேவனி டத்திலிருந்து வருகிறது. (1 தீமோத் 1:17) மனிதனின் சரீரம் சாவுக்கேது வானது. (ரோம 8:11). தானியேல் தீர்க்கன் சொல்லும் பொழுது, "நான் என் தேகத்தினுள் என் ஆவியிலே சஞ்சலப்பட்டேன்" என்கிறார் (தானி 7:15). அதாவது, தேகமாகிய சரீரத்தையும், ஆவியையும் வேறுபடுத்தியே சொல்கிறார். ஆக மனிதன் என்பவன், அழியாத்தன்மையுடைய ஆவியையும், அழியும் தன்மையுடைய சரீரத்தையும் பெற்று விளங்குகிறான்.

மரணம் என்பது புறம்பான மனிதனைத் தான் தொடமுடியுமே தவிர, உள்ளான மனிதனை அல்ல (II தீமோ 4:6). உள்ளான மனித னாகிய ஆவி எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஆவியானது அழியும் தன்மை உடையது அல்ல. (சங் 22:26, மத் 10:28). பேதுருவும் ஆத்துமாவின் அழியாத் தன்மையை அறிந்தபடியினால் தான், "... நான் என் கூடாரத்தை விட்டுப் போவது சீக்கிரத்தில் நேரிடு மென்று அறிந்து" . . என்கிறார்.

சரீர மரணம் என்பது ஆவியும், சரீரமும் பிரிக்கப்படுகின்ற ஒரு நிலைதான். இருக்கின்ற ஒருவன் இல்லாமல் போவதென்பது இதன் பொருள் அல்ல. யாக்கோபு ஆசிரியர் சொல்லும் பொழுது, "அப்படியே ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது" என்கிறார். அவர் சரீரம் இல்லாத ஆவி செத்ததென்று சொல்லவில்லையென்பதை நாம் கூர்ந்து கவனிப்பது அவசியம். ஆக, வேத வாக்கியங்களின்படி இருந்தவன், "இனிஇல்லை" என்ற பேச்சுக்கே இடமில்லை.

புதிய ஏற்பாட்டின் மூல மொழியாகிய கிரேக்கத்தில், மரணத்தைப் பற்றி ஒரு விளக்கம் இவ்வாறாக உள்ளது. நங்கூரம் பாய்ச்சப்பட்டு, கட்டப்பட்டிருக்கிற ஒரு கப்பல், அக்கரைக்குப் போகும்படி கட்டவிழ்க் கப்படுகின்ற ஒரு செயலைக் குறிக்கிறது. இதன் மூலம் மரணம் என்பது கடந்து போதல் (Passing away) என்று தெரிகிறது.

நாம் வாழும் இன்றைய காலகட்டத்தில் மரணத்தைப்பற்றி மாறுபட்ட கருத்துக்களும் விளக்கங்களும் இருப்பதைப் போலவே நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூவுலகில் வாழ்ந்த காலத்திலும் இருக்கத்தான் செய்தது. யூத மார்க்கத்தில் பரிசேயர்களின் பக்தி வைராக் கியத்திற்கு எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல என்று கருதப்பட்ட, சதுசேய கூட்டத்தார் மரணம் ஒரு மனிதனின் முடிவான முடிவு என்றே நம்பினர். ஆகவேதான் ஏழு சகோதரர்களை ஒருவர் பின் ஒருவராக மணந்து கொண்ட ஒரு பெண்ணின் நிலை உயிர்த்தெழு தலில் என்ன ஆகும் என்று வினா எழுப்பி நமதாண்டவரை மடக்கப் பார்த்தனர்.

ஆனால், முட்செடிதனில் தேவன் மோசேக்குத் தரிசனமான போது நான் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிற உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன்" என்றார். (யாத் 3:2-6) அவர், பிதாக்களின்தேவனாயிருந்தேன் என்று கடந்த காலத்தில் பேசாமல் தேவனாயிருக்கிறேன் என்று நிகழ் காலத்தில் பேசுகிறார். அச்சமயத்தில் முற்பிதாக்களாகிய அவர்கள் மரித்து 300 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் வாழ்ந்து கொண்டுள் ளவர்களாகவே தேவனால் சொல்லப்படுகிறார்கள். ஏன்?

வேத வாக்கியங்களின் ஆலோசனைப்படி தேவனோடு ஒப்புரவாக் கப்பட்டு உத்தமமாய் ஜீவிக்கிற ஒரு தேவப் பிள்ளையை மரணம் சந்திக்கும் பொழுது, அந்த நிமிடத்தில் தானே அவன் காணக்கூடாத ஒரு உலகத்திற்கு இளைப்பாறும் படியாகச் சென்று விடுகிறான். உருக்கு லைந்து போகும் சரீரத்தோடு அவன் கல்லறையில் இருப்பதில்லை. கடைசியாக மரித்த அப்போஸ்தலன் என்று கருதப்படுகின்ற மூப்ப

னாகிய யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்டபொழுது, "கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது, அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். அவர்க ளுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்" என்கிறார். (வெளி 14:13)

ஆக, சரீர மரணத்திற்குப் பிறகும் ஒருவனுடைய ஆத்துமா வாழ்ந்து கொண்டுதான் உள்ளது.

சரி. சரீர மரணத்திற்குப் பிறகும் ஆத்துமா வாழ்ந்துகொண்டு தான் இருக்கிறது என்றால், அவர்கள் உணர்வும், நினைவும் உள்ளவர்களாக இருக்க முடியுமா? இந்த கேள்விக்கான பதிலைப் புரிந்து, விளங்கிக் கொள்வதில் கொஞ்சம் பிரச்சனை இருந்தாலும் உணர்வு நினைவும் இருப்பதாகவே வேதாகமம் சொல்கிறது. லாசரு, ஐசுவரியவான் உவமையில் நாம் அதை தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும் (லூக் 16:20-31) லாசரு, ஐசுவரியவான் இரண்டு பேரும் மரிக்கின் றனர். பரதீசில் (Paradise) இருந்த லாசரு, ஆபிரகாமின் மடியில் விடப் படுகிறான், ஐசுவரியவான் பாதாளத்தின்(Hades) வேதனை நிறைந்த பகுதியில் (Tartarus) விடப்படுகிறான். வசனம் 25-ல் ஐசுவரியவான் தண்ணீர் கேட்டபொழுது, நீ பூமியில் செய்தவைகளை "நினைத்துக் கொள்" அதாவது ஞாபகப்படுத்திக் கொள் என்று சொல்லப்படுகிறான்.

அது மாத்திரமல்ல வசனம். 27-ல் எனக்கு ஐந்து சகோதரருண்டு, அவர்களுக்கு சத்தியம் சொல்ல லாசரு அனுப்பப்பட வேண்டும். என்கிறான். பூமியில் தாங்கள் விட்டுவந்த செயல்களைக் குறித்த நினைவு இருப்பது ஆச்சரியமாக உள்ளதா? இன்னும் கீழுள்ள வசனங்களை வாசிப்போமானால் அங்கு ஒரு அருமையான உரையாடலே நடக்கிறது. உவமை தானே என்கிறீர்களா? உவமைகள் பரலோகத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தத்தானே நமதாண்ட வரால் சொல்லப்பட்டன.

மேலும், இதே பகுதியில் லாசரு தேற்றப்பட்டான் என்றும் ஐசுவரி யவான் வேதனைப்பட்டான் (வ. 22) என்றும் சொல்லப்படும் பொழுது அவர்கள் உணர்வற்றவர்களாக இருந்தால் தேற்றப்படு தலும் வேதனைப்படுதலும் எப்படித் தெரியும்? இனியும் உங்களுக்கு சந்தேகம் இருக்க வாய்ப்பில்லை என்று நம்புகிறேன். மரித்துப் போனவர்களுக்கு, தாங்கள் வாழ்ந்த காலத்தில் நடந்தவைகள் நினைவில் இருக்குமேயொழிய, இன்றைக்கு பூமியில் நடக்கிற காரியங்களைக் குறித்து அறிந்து கொள்ள நிச்சயமாய் வாய்ப் பில்லை. வேதாகமம் இதைக் குறித்து எங்கும் பேசவில்லை. நாம் இதிலே குழப்பமடைய அவசியமில்லை.

மரித்துப் போனவர்கள் என்றென்றும் பாதாளத்தின் பகுதிகளில் இருப்பதில்லை. பின்பு உயிர்த்தெழுதல் நடக்கும். கிறிஸ்துவ மார்க்கத்தின் போதனைகளுக்கு மணி மகுடமாக இருப்பது உயிர்த்தெழுதல்தான். தாவீது அரசன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து முன்னறிவித்தபோது (சங் 16-10) கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்தில் விடப்படுவதில்லையென்றும் அவருடைய சரீரம் அழிவைக் காண்பதில்லையென்றும் சொல்கிறார். (அப் 2:31) அதாவது, அவருடைய ஆத்துமாவும், சரீரமும் பிரிகின்ற நிலைமை தற்காலிகமானதே என்று உணர்த்துகிறார். அதைப்போலவே இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்தபொழுது அவருடைய ஆத்துமாவும் சரீரமும் ஒன்று சேர்கிறது. மூன்றாம் நாளிலே அவரை அடக்கம் பண்ணின கல்லறை திறந்து கிடந்தது என்பதை நாமறிவோம் (லூக்கா 24:23) இன்றைக்கு என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று கள்வனிடத்தில் சொன்ன கிறிஸ்துவானவர், உயிர்த்தெழுதலுக்குப் பிறகு இன்றைக்கு பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்று நாம் அறிவோம். (மாற் 16:19) ஆனால் அந்தக் கள்வனின் ஆவியோ இந்த மணி நேரம் வரைக்கும் பரதீசில்தான் இருக்க முடியும்.

மீண்டும் கிறிஸ்துவானவர் வரும்பொழுது பாதாளத்தின் ஆவிகள் வெளியே வரும்''பிரேதக் குழிகளில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்'' பிரேதக் குழிகளில் இருந்து எழுந்திருக்கும் பொழுதே மரித்தவர்கள் தங்கள் கிரியைகளின் பலனுக்கேற்றவாறுதான் எழுந்திருப்பார்கள். அதைத்தான் யோவான் ஆசிரியர் நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள் என்கிறார். (யோவா 5:28, 29)

உயிர்த்தெழுதல் நடக்கும்பொழுது எப்படிப்பட்ட சரீரத்தோடு மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள்? உயிரோடு இருக்கிறவர்கள் எப்படிப்பட்ட சரீரத்தோடு நியாயத்தீர்ப்புக்குப் போவார்கள்? என்று நாம் சிந்திப்பது நியாயமே. அதைத் தான் பவுலடியார், ''மாம்சமும், இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்க மாட்டாது'' என்கிறார் (1 கொரி 15:50). அதை மேலும் விளக்கும் பொழுது ''இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்'' என்று சொல்கிறார் ''எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்'' என்று கூறுகிறார் (1 கொரி 15:52) மறுரூபமாக்கப்படும் செயல் ''ஒரு இமைப் பொழுதிலே'' நடக்கும் என்று சொல்லப்படுகிறது. அது

எப்படி நடக்கும் என்று நாம் நினைக்க கூடும். வானத்தையும், பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் வார்த்தையினாலே படைத்த தேவனுக்கு இது ஒன்றும் பெரிய காரியம் அல்லவே?

சரி, அடுத்தடுத்து நியர்யத்திர்ப்பு நியாயத்திர்ப்பு என்று சொன்னவுடனேயே நமக்கு நடுக்கம் ஏற்படுகிறது. ஏனெனில் வரப்போகும் நியாயாதிபதி நீதியுள்ளவர். இந்த உலகத்திலே நீதியும், நியாயமும் தடம் புரண்டு செல்வது வாடிக்கையாகிவிட்டது. ஆனால் கிறிஸ்துவின் நியாயத்திர்ப்பு சகல நீதியோடும் விளங்கும். அங்கே இரக்கத்திற்கு வழியில்லை. நியாயத்திர்ப்புக்கு உண்டான சட்டப்புத்தகம் வேதாகமம் தான். சட்டங்கள் வேத வசனங்களேயொழிய வேறல்ல (யோவா 12:48).

கிறிஸ்துவானவர், மகிமை பொருந்தினவராய் சகல பரிசுத்த தூதரோடும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது பூமயின் சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர் அவர்களை பிரித்து செம்மறி யாடுகளைத் தமது வலது பக்கத்திலும் வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார் (மத் 25:31-33).

இராஜாவாகிய கிறிஸ்து தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து "வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்பார். (மத் 25:34) அந்த ராஜ்யம், "மகா இன்ப நகரம். அதன் பேரழகை வர்ணிக்க வார்த்தைகளில்லாமல் தடுமாறித்தான் பவுலடியார் இப்படிச் சொல்கிறாரோ?" "எழுதியிருக்கிறபடி தேவன்தம்மில் அன்பு காட்டுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை காது கேட்கவுமில்லை அவைகள் மனிதனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை என்கிறார். (1 கொரி 2:9) மனிதனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை என்று சொல்லும் பொழுது பரலோகத்தின் மகிமையான அமைப்பை மனிதன் தன் கற்பனை வளத்தால் வளைத்துப் போடமுடியாது என்று நினைத்தாரோ?

இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர் சபிக்கப்பட்டவர்களே என்னைவிட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்கிறார் (மத் 25:41) நரகத்தின் வேதனை உலகத்தின் எந்த வேதனையோடும் ஒப்பிட முடியாதது. நெருப்பின் ஆரம்ப

முதலே, தேவனோடு எதிர்த்து நின்ற பிசாசுடன் நாமும் சேர்ந்து கொள்ளப் போகிறோமா?

நிதானித்துப் பார்க்க வேண்டியது யாதெனில், ஜீவனாக இருந்தாலும், ஆக்கினையாக இருந்தாலும் அவைகள் நித்தியமானது (மத் 25:46) ஒருகுறிப்பிட்ட கால அளவோடு முடிவது அல்ல. ஆகவே ஜாக்கிரதையாக முடிவெடுக்க வேண்டியது அவசியம். இனியும் நாம் ஏனோதானோ என்று இருக்க முடியாது.

இதை வாசிக்கும் அருமையான நண்பரே! எப்படிப்பட்டதான மரணத்தை சந்திக்க நாம் ஆயத்தமாக உள்ளோம்? மரணத்திற்குப் பிறகு மனந்திரும்ப வாய்ப்பில்லை. பூமியில் தானே அந்த வாய்ப்பு. பயன்படுத்துவோமா?

லாசரு, ஐசுவரியவான் உவமையில் பெரும் பிளவு இருப்பதைப் போல இந்தப் பூமியிலும் பெரும் பிளவு உள்ளது. ஒருபுறம் தேவனின் இரட்சிப்பின் திட்டத்தை ஏற்று ஜீவிக்கும் பரிசுத்தவான்கள், எதிர் புறம், பாவத்தின் இன்பத்தில் திளைத்து அழிந்து கொண்டிருக்கும் பிசாசின் கூட்டம்.

ஆனால், "இரண்டு பெரும் பிளவுக்கும் ஒரு மாபெரும் வித்தியாசம் உள்ளது. அந்த மாபெரும் வித்தியாசம் தேவனால் மனுக்குலத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சொல்ல முடியாத ஈவு. ஆம், பாதாளத்தின் பெரும் பிளவு கடக்கமுடியாதது. பூமியில் உள்ள பெரும் பிளவு கடக்கக் கூடியது.

தேவன் தம்முடைய ஒரே பேறான தேவமைந்தனை இந்தப் பூமிக்கு அனுப்பி, கொடுமையான சிலுவை மரணத்தை ஏற்கும்படி செய்ததால், பாவிகளாகிய நாம் இந்தப் பூமியில் உள்ள பெரும் பிளவைக் கடந்து மகிமையை சுதந்தரித்துக் கொள்ளும் பெரும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

மரணம் யாருக்கு, எப்பொழுது என்று தெரியாத நிலையில் நாம் ஜீவித்துக் கொண்டுள்ளோம். மெய்க் கிறிஸ்தவர்களாக மாறி, சாட்சியாக வாழாத நிலையில், நம்மைக் கிறிஸ்தவர்கள் என்று இந்தப் பூமியில் சொல்லிக் கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை. நோக்கமும், தெளிவும் இல்லாமல் வாழ்கின்ற அறிவிலிகளாகவே இருப்போம்.

இந்தப் பூமியில் கிறிஸ்தவனாக ஜீவிக்க விரும்பும் அனைவர் ஆசையும் "பரலோகமே". அந்தப் பரம கானானை அடைய ஒரே வழி கிறிஸ்து காட்டிய இரட்சிப்பின் திட்டத்துக்குள் வருவதே. மனித கோட்பாடுகள் மாயையானவை. அவைகளின் முடிவு அழிவு. வேதத்திற்கு விரோதமானது விருதா, சத்தியத்திற்கு விரோதமானது அபத்தம்.

நண்பரே! நம்முடைய நிலை என்ன? மெய்யான வழியைப் பின்பற்ற விலை கொடுக்கத் தேவையில்லை. எளிமையான வழியைக் கிறிஸ்து பெருமான் காட்டியுள்ளார். இதோ இரட்சிப்பின் வழி வசனத்தைக் கேளுங்கள் (ரோம 10:14). வசனத்தைக் விசுவாசியுங்கள் (மாற் 16:15, 16) பாவத்தை விட்டு மனந்திரும்புங்கள் (அப் 17:30). இரட்சிப்புண்டாக வாயினால் கிறிஸ்துவை அறிக்கையிடுங்கள். (ரோம 9, 10). பாவ மன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங் கள். (அப் 2:38).

"ஆம், ஒரு தரம் பிறப்பவன் இரண்டு தரம் மரிக்கிறான். இரண்டு தரம் பிறப்பவன் ஒரு முறை மரிக்கிறான்"

E.Z.S. ராஜநாயகம்

## உங்கள் கவனத்திற்கு

"அற்புத அடையாளங் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் வரம்" மற்றும் "எனக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறாரா?" என்ற தலைப்புகளில் 38 பக்கங்கள் கொண்ட ஒரு சிறு நூல் வெளியிடப்பட்டிருக்கிறது. ஊழியர்கள், வேத மாணவர்கள், விசுவாசிகள் ஆகிய அனைவருக்கும் மிகுந்த பயனுள்ளதாய் இருக்கும்.

ஆப்செட் (off-set) முறையில் அச்சிடப்பட்டு நவீன முறையில் பைண்டிங் மற்றும் லேமினேசன் (Lamination) செய்யப்பட்டுள்ளது. புத்தகம் முற்றிலும் இலவசம்.

தபால் செலவுக்கு மட்டும் நீங்கள் பணம் அனுப்பிக் கொடுத்தால் புத்தகம் உங்களுக்கு உடனே அனுப்பிக் கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 10 | புத்தகத்திற்கு | ரூ. 9.00 |
| 25 | புத்தகத்திற்கு | ரூ. 21.25 |
| 50 | புத்தகத்திற்கு | ரூ. 40.00 |

M.O. செய்ய வேண்டிய முகவரி

தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்

C/o. கிறிஸ்துவின் சபை

தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701.

# "விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களாவன்"

கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்புக்குப் பின்னும், தமது பரலோகப் பிதாவினிடத்திற்குத் திரும்புவதற்கு சற்று முன்னும், இயேசு கிறிஸ்து அவருடைய அப்போஸ்தலர்களை தம்மைச் சுற்றிலும் உட்கார வைத்து, "பின்பு அவர் அவர்களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நலமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள் சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாதாது; வியாதியஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். இவ்விதமாய்க் கர்த்தர் அவர்களுடனே பேசின பின்பு, பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் புறப்பட்டுப் போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென்" (மாற்கு 16:15-20)

இன்று எல்லா கிறிஸ்தவர்களும், அல்லது அவர்களில் சில பேராவது பிசாசுகளைத் துரத்த முடியும் என்றும், நவமான பாஷைகளில் பேசமுடியுமென்றும் பாதிக்கப்படாமல், விஷப் பாம்பு களைப் பிடிக்கக் கூடும் என்றும், சாவுக்கேதுவான விஷத்தைக் குடித்தாலும் மரண மேற்படாது என்றும், வியாதிக்காரர்களை அற்புதமாக சுகப்படுத்த முடியும் என்றும் நம்ப விரும்பும் மக்கள் இருக்கின்றனர். அவர்களுடைய நம்பிக்கையை நிரூபிக்க மாற்கு 16:17, 18 வசனங்களைக் காட்டுவார்கள். ஆனால் பொதுவாக கிறிஸ்தவர்கள் இந்தக் காரியங்களைச் செய்யும் வல்லமையைப் பெற்றிருப்பார்கள் என இந்த வசனப்பகுதி கூறுகிறதா?

விசுவாசமுள்ளவர்களால் நடக்கும் அற்புத அடையாளங்களைப் பற்றி நாம் பேசத் தொடங்கும் போது, பல காரியங்களை தமது மனதில்

வைத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம் என நான் நினைக்கிறேன்.

முதலாவதாக, தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை, அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே இயேசு வாக்களித்தார் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். (யோவான் 14:20; லூக்கா 24:49; அப். 1:8). அடுத்து, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சீடர்களும் கூட பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அவர்களின் பேரில் கைகளை வைக்கும் அதிகாரமும் வல்லமையும் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டது. (அப். 6; அப். 19). ஆனால், பொதுவாக கிறிஸ்தவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றார்கள் என்பதாக புதிய ஏற்பாட்டின் பக்கங்கள் முழுவதையும் தேடினாலும் ஒரு இடத்திலும் கூட நீங்கள் காண முடியாது. அப்படியானால், அற்புத காரியங்களைச் செய்யும் வல்லமை பெற்ற கிறிஸ்தவர்கள் யாரும் இன்று இல்லை என்பது அதன் பொருள். தங்களுக்கு இந்த வல்லமை இருக்கிறது என்று உரிமைகோரும் பலர் உள்ளனர். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் தங்களுடைய முதலாவது அற்புதத்தை இன்னும் அவர்கள் செய்யவில்லை என்பதே உண்மை. அவர்களால் செய்ய முடியாது. இப்படிப்பட்ட மக்கள் தாங்கள் ஏமாற்றப்பட்டுள்ளதோடு நின்று விடாமல், தங்களைப் பின்பற்றுவோரையும் ஏமாற்றுகிறார்கள்.

இரண்டாவதாக, "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன" என்ற இயேசுவின் அறிவிப்பு சகல கிறிஸ்தவர்களுக்கும் அளிக்கப்பட்டதாக இருந்திருந்தால், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை தேர்ந்தெடுக்கப்பட்ட சீடர்கள் சிலர் மட்டுமே பெற்றுக் கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலர்கள் அவர்களின் மேல் கைகளை வைக்க வேண்டிய அவசியம் என்ன? அப்படியிருப்பின் ஏற்கனவே அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாக அவர்கள் இருந்திருப்பார்களே? எனவே, அப்போஸ்தலர்கள் தங்களுடைய கைகளை அவர்கள்மேல் வைக்கும் வரை அப்படிப்பட்ட வல்லமையை சீடர்கள் பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாகிறது அல்லவா? அதன் பின்னராக, உதாரணத்திற்கு, பிலிப்பு சமாரியாவுக்குச் சென்று அவர்களிடம் கிறிஸ்துவைப் போதித்தான். "பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒரு மனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள்

மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள்," (அப் 8:6, 7) என்றும் நமக்குச் சொல்லப்படுகிறது. இப்போது, பிலிப்புக்கு இந்த வல்லமை எப்போது வந்தது? அப்போஸ்தலர்கள் பிலிப்புவின் மேலும் இன்னும் ஆறு சீடர்களின் மேலும் கைகளை வைத்த போது தான் வந்தது. அதற்கு முன்பு, இச்சீடர்கள் பரிசுத்த ஆவியின் கனிகளைப் பெற்றிருந்தனர். (அப். 2:38) அவர்கள் பரிசுத்த ஆவியால் நிரம்பியிருந்தார்கள். (அப். 6:3) ஆனாலும் அற்புத அடையாளங்களைச் செய்யும் வல்லமையை அவர்கள் பெற்றிருக்கவில்லை.

மூன்றவதாக, "விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன" என்ற இயேசுவின் அறிவிப்பு சகல விசுவாசிகளுக்கும் அளிக்கப்பட்டிருந்தால், அந்தக் காலம் தொடங்கி நமது காலம் வரையிலுள்ள சகல கிறிஸ்தவர்களும் அந்நிய பாஷைகளில் பேசவும், விஷமுள்ள சர்ப்பங்களைக் கையாளவும், சாவுக்கேதுவான விஷத்தைச் சாப்பிட்டு உயிரோடிருக்கவும், பிசாசுகளைத் துரத்தவும், அற்புதமாக சுகமளிக்கவும் கூடிய அற்புத அடையாளங்களைச் செய்யும் வல்லமையைப் பெற்றிருக்க வேண்டும் : ஆனால் எல்லா கிறிஸ்தவர்களும் இவற்றைச் செய்ய முடியாது. மேலும், அப்போஸ்தலர்களும் பொதுவாக சகல கிறிஸ்தவர்களுமே இந்த வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொண்டார்கள் எனவாதம் செய்வோரும்கூட சகல கிறிஸ்தவர்களும் இக்காரியங்களைச் செய்ய முடியாது என்பதை ஒப்புக் கொள்ளுவார்கள். சந்தேகமின்றி, சில சாக்கு போக்குகளைச் சொல்லுவர்: 'அவர்களுக்கு விசுவாசம் போதாது; 'கர்த்தர் மட்டுமேயன்றி அவர்களால் இவற்றைச் செய்ய முடியாது; 'இவற்றை செய்யச் சொல்லி கர்த்தரை சோதிக்க அவர்கள் விரும்பவில்லை. ஆனால் இப்படிப்பட்டவைகளை வேதாகமம் எங்கே போதிக்கிறது? இப்படிப்பட்ட அற்புதங்களை பொதுவான கிறிஸ்தவர்கள் செய்யும்படியாக கர்த்தர் அசைத்தால் அவர்களால் செய்யக்கூடும். அப்போஸ்தலர்களையும் அவர்கள் யார் மேல் கரங்களை வைத்தார்களோ அவர்களாலும் முடிந்தது. நோயாளியை சுகப்படுத்துவதாகவும், அந்நிய பாஷைகளில் பேசுவதாகவும், பிசாசுகளை துரத்துவதாகவும், அந்தக் காலக் கட்டத்தில் தானே பவுலை ஒருசர்ப்பம் தீண்டவும் அதைக் கவனித்தார்கள். நிச்சியமாக அவன் மடிந்து போவான் என நினைத்திருக்கையில் அவன் சாகாமல், எளிதாக கையை உதறி அந்த சர்ப்பத்தை நெருப்பில் போட்டு

விட்டு அவன் வழியில் செல்லுவதாகவும் சுவிசேஷம் நமக்குச் சொல்லுகிறது. (அப். 28:1-10) இந்த நவீன காலத்திலும் விஷமுள்ள பாம்பை ஒரு சிலர் வேண்டுமென்றே பிடித்து, தங்களுடைய வல்லமையைக் காட்ட முயன்று, பாம்பு தீண்டி தோல்வியுற்று மடிந்துபோன கதையை சில இடங்களில் நாம் கேட்க முடிகிறது.

நான்காவதாக, இப்போது மேலே கூறப்பட்ட சகல காரியங்களையும் நினைவில் வைத்துக் கொண்டு, மாற்கு 16ம் அதிகாரத்தைப் படித்துப் பார்ப்பீர்களானால், கர்த்தர் அப்போஸ்தலர்களைச் சந்தித்து அவர்களுடைய பணியைப் பற்றியும் அதைத் தொடர்ந்து நடப்பவற்றைப் பற்றியும் கூறுவதைக் காணலாம். 'அவர்கள்' என பல தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ள பதமானது அப்போஸ்தலர்களையே ஒவ்வொரு முறையும் குறிக்கின்றது. "விசுவாசமுள்ளவர்களால் நடக்கும் அடையாளங்களாவன" என்று இயேசு கூறிய போது, அவர் பொதுவாக கிறிஸ்தவர்களைப் பற்றிக் கூறவில்லை, மாறாக அப்போஸ்தலர்களைப் பற்றியே அவர் கூறினார். பொதுவாக கிறிஸ்தவர்களை (அற்புதங்களை செய்யவில்லை? ஏனெனில், அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே இந்த வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டிருந்தது; அப்போஸ்தலர்கள் அந்த எல்லா காரியங்களையும் செய்யக்கூடியவர்களாக இருந்தனர். தனிப்பட்டவர்களுக்கு நற்செய்தி போதிக்கப்படுவது பற்றியும், அதற்குக் கீழ்ப்படிபவர்களையும், கீழ்ப்படியாதவர்களையும் பற்றிக் குறிப்பிடுகையில், கிறிஸ்து கூறினார் : "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16 : 16). அந்த அற்புத அடையாளங்கள் அப்போஸ்தலர்களைத் தொடர்ந்த நடைபெறுவதாக பின்னர் கர்த்தர் கூறினாரே தவிர, அவர்களின் போதனைகளின் விளைவாக நற்செய்திக்குக் கீழ்ப்படிந்தவர்களைப் பற்றி குறிப்பிடவில்லை. ஆனால் மீண்டுமாக, காரியங்கள் இப்படியாகத்தான் நடந்தன என நிச்சயமாக தெரியும் படிக்கு, அந்த அடையாளங்களைச் செய்ய முடிந்தவர்களையும், அவற்றைச் செய்ய முடியாதவர்களையும் பாருங்கள். யார் இந்த அடையாளங்களைப் பெற்றனர் என நீங்கள் அல்லது யாரும் ஏற்றுக் கொள்ளுவீர்கள்.

இல்லை, இன்று பிறமொழிகளைக் கற்றுக் கொள்ளாமல் அவைகளைப் பேசக்கூடிய கிறிஸ்தவர்கள் எவரும் இல்லை. அல்லது பிசாசுகளைத் துரத்தவோ, நோயாளிகளை அற்புதமாக சுகப்ப

டுத்தவோ, அப்போஸ்தலர்களுடைய காலத்திலே அவர்கள் செய்த சகல அற்புதமான காரியங்களையோ செய்யும் எந்தக் கிறிஸ்தவர்களும் இன்று இல்லை. அப்படியிருந்தால், எல்லா மருத்துவமனைகளிலும் உள்ள சகல நோயாளிகளையும் சுகப்படுத்தவும், கல்லறைகளிலிருந்து மரித்தோர் அனைவரையும் எழுப்பவும், பார்வையற்ற சகலருக்கும் பார்வையளிக்கவும், கை, கால்களை இழந்த ஊனமுற்றோர்களுக் கெல்லாம் அவற்றை அளிக்கவும் இன்னும் இது போன்ற அற்பு தங்களை இன்று ஏன் செய்ய முடிவதில்லை? இவைகளைச் செய்யக்கூடிய ஒருவர் கூட இன்று இல்லையே, ஏன் என்று உங்க ளுக்குத் தெரியுமா? ஏனெனில், இன்று பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை கர்த்தர் அவர்களுக்கு அளித்திருக்கவில்லை. ஏனெனில் அவ்வாறு ஒரு போதும் வாக்களிக்கவில்லை.

தாம் செய்வதாக வாக்களித்த சகல காரியங்களையும் கர்த்தர் செய்து கொண்டு வருகிறார். அவருடைய விருப்பத்தை நாம் அறிந்து கொள்ளும்படியாக அவருடைய வசனத்தைக் கொடுத்து, அதை விசுவா சிக்கவும், அதற்குக் கீழ்ப்படியவும், அதன் விளைவாக நம்மை இரட்சிக் கவும் அவர் வாக்களித்திருக்கிறார். இதற்கு மேல் நமக்கு என்ன தேவை?

முன்பு சில சமயங்களில் நான் குறிப்பிட்டது போல, மீண்டுமாக உங்களை நினைவுபடுத்த விரும்புகிறேன்; அற்புதங்களைச் செய்யும் வல்லமையைத் தாங்கள் அடைந்திருப்பதாக உரிமை கொண்டா டுவோர், நீங்கள் வேதாகமத்தில் காண முடியாத சபைகளில் அங்கம் வகிக்கின்றனர்; மனிதன் உண்டாக்கிய பெயர்களை சபைகளுக்குத் தரித்துக் கொண்டு, சுவிசேஷத்திற்கு விரோதமான பல காரியங்களை அவர்கள் போதித்து வருகின்றனர். தங்களுக்கு பரிசுத்த ஆவியான வரின் வழி நடத்துதல் இருப்பதாக இவர்கள் கூறுவது எப்படி? நிச்ச யமாக, இப்படிப்பட்ட தவறுகளில் ஆவியானவர் அவர்களை வழிநடத்திச் செல்லமாட்டார்?

என் நண்பர்களே, ஏமாந்து போகாதீர்கள். வேதாகமத்தைப் படியுங்கள், கற்றுக் கொள்ளுங்கள், விசுவாசித்து அதன் உபதேசங்க ளுக்குக் கீழ்ப்படியுங்கள். அப்படிச் செய்தால் மட்டுமே நீங்கள் சரியான பாதையில் நடைபோடமுடியும், மற்றப்படி அல்ல அல்ல.

எஸ்.எஸ். ராஜன்
J.C. சோட்

பெண்கள் பகுதி

## நரகத்தைப் பற்றி எனக்குச் சொல்

"இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும், தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள், அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார். (மத்தேயு 13 : 49, 50)

தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும். (IIதெசலோனிக்கேயர் 1:7,8)

அப்பொழுது, இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர், சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும், ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" (மத்தேயு 25 : 41)

"மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன் மிருகமும் கள்ளத்தீர்க்க தரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும், கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும், பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். (வெளி 20: 10)

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும் கொலை பாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்ரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார் (வெளி 21 : 8)

"அப்பொழுது மரணமும், பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்" (வெளி 20:14)

இது ஒரு குடும்ப ஜெப தியானத்திற்கான நேரம். அந்தோணி, அசிமா, ஜேம்ஸ், ஆகிய எல்லோரும் தங்கள் வேதாகாமத்துடன் வந்து அமர்ந்து தங்கள் தகப்பனார் தியானத்தைத் தொடங்குவதற்காகக் காத்திருந்தனர். பீட்டர் வந்தவுடன்" சென்ற இரவில் நரகத்தைப் பற்றிக் கேட்டீர்கள். ஆகையால் அதைப் பற்றி நினைப்பதற்கு அது ஒருமகிழ்ச்சியான இடமல்ல" என்று சொல்லி ஆரம்பித்தார். நிறைய மக்கள் நரகம்

என்று ஒன்று இருக்க முடியாது என எண்ணுகின்றனர். ஏனெனில் அன்பான நமது தேவன் அப்படி ஒரு இடத்திற்கு மக்களை அனுப்ப மாட்டார் எனவும் நினைக்கின்றனர். ஆனால் தேவன் சொல்லும் எதையும் நாம் விசுவாசிப்பதென்பதின் பொருள் அவர் சொல்லும்
எதையும் நாம் விசுவாசிப்பதென்பதின் பொருள் அவர் சொல்லும்
எல்லாவற்றையும் விசுவாசிப்பது தான். அப்படியானால் அதில் நரகமும் அடங்கும்.

முதலாவது நாம் வேதாகமத்தை வாசிக்கத் தொடங்கி, அந்த பயங்கரமான இடத்தைக் குறித்து, தேவன் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம். அந்தோணி, நீ மத்தேயு 13 : 50 ஐ வாசிக்கவும், அசிமா, 2 தெ. 1 : 7, 8 ஐ வாசிக்கவும் ஜேம்ஸ் நீ மத் 25 : 412-ஐக் கண்டு பிடிக்க முடியுமா? அம்மா நீங்கள் வெளி 20 : 10 ஐ வாசிக்க முடிந்தால் நான் 21 : 8 ஐயும் 20 : 14 - யும் வாசிக்கிறேன் என்றார். தேவன் தண்டனை கொடுக்கும்படியான ஒரு பகுதியை கண்டிப்பாக ஆயத்தம் செய்து வைத்திருக்கிறார் என்பதற்கு இன்னும் பல பகுதிகள் உண்டு. ஆனால் நாம் யாரும் போக விரும்பாத "நரகம்" உண்டு என்பதை அறிந்து கொள்ள இந்தப்பகுதிகள் போதுமானது.

அப்பா, நாம் எல்லோரும் பரலோகத்தில் அவருடன் வாழும்படியாய் தம்முடைய ஒரே பேரான குமாரனென்றும் பாராமல், அவரை அனுப்பி, நமக்காக அவரைச் சாகக் கொடுக்கும் அளவுக்கு நம்மீது அன்புகூர்ந்த தேவன். ஏன் நரகத்தை உண்டாக்கினார்? ஏன் எல்லோரையும் பரலோகத்திற்கு அழைத்துச் செல்லக் கூடாது? இது அந்தோணி கொடுத்த கேள்விக் கணைகள்.

இதைப் புரிந்து கொள்வதற்கு, தேவன் மனிதனைப் படைக்கும் போது, "அவனை தெரிந்தெடுக்கும் உரிமையுள்ளவனாகப்" படைத்தார் என்பதை அறிய வேண்டும்.

நாம் அவருக்குக் கீழ்படியத் தெரிந்தெடுப்பதின் மூலம், அவரை நேசிக்கத் தெரிந்தெடுப்பதன் மூலம், அவருடைய பிள்ளைகளாக இருக்கத் தெரிந்தெடுப்பதின் மூலம், அவரில் அன்பு கூற வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். மனிதர்கள் அவரைத் தெரிந்தெடுத்தாலும், தெரிந்தெடுக்காவிட்டாலும் எல்லோரையும் பரலோகத்திற்கு அழைத்து சென்று, எல்லோரும் அவருடன் வாழ்வதாய் இருந்தால் - இயேசு கிறிஸ்துவை பூமிக்கு அனுப்பி அவரை மரிக்கச் செய்திருக்கத் தேவையில்லை. "நாம் தேவனுக்குக் கீழ்ப்படியவும் தேவையில்லை." தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களும், நீதியுள்ள ஆக்கினியைச் செலுத்தும்படிக்கு இயேசு கிறிஸ்து தம்முடைய

தூதரோடு வருவார் என்பதை வாசிக்கவில்லையா? (II தெச 1 : 7-8) ஆகையால் நம்முடைய இரட்சிப்பு சம்பந்தப்பட்ட எல்லாவற்றிற்கும் தேவன் மாத்திரம் பொறுப்பல்ல. அவர் இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் இரட்சிக்கப்படுவதற்குண்டான வழியை ஏற்படுத்தியுள்ளார். ஆனால், அவ்வழியில் வாழவிரும்புவதை மனிதர்களாகிய நாம் தான் தெரிந்தெடுக்க வேண்டும்''

''அந்தோணி, நீ சிறையாய் வாழ்வதை விரும்புவாய்'', என நினைக்கிறாயா? என்று மேரி கேட்டாள்.

''இல்லை - நான் குற்றவாளிகளுடனும், கொலைகாரர்களுடன் வாழ விரும்ப மாட்டேன்'' என்றான்.

''அதே காரணத்துக்காகத்தான் தேவன் பரலோகத்தையும் நரகத்தையும் உண்டாக்கினார். இவ்வுலகில் அநேகர் உண்மையாகவே தேவனை வெறுக்கின்றனர். அவருக்கு விரோதமாக என்னவெல்லாம் செய்ய முடியுமோ அவை எல்லாவற்றையும் செய்கின்றனர். இன்னும் அநேகர் தங்களை நல்லவர்கள் என நினைக்கின்றனர். ஆனால் தேவன் தம்முடைய வேதவசனங்களில் சொல்லியுள்ளவைகளுக்கு அவர்கள் செவிமடுப்பதில்லை. ஜனங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து வாழ்வார்களானால்" அவர்கள் மரிக்கும் பொழுது ''பரலோகத்தில்'' வாழத் தங்களைத் தயார் செய்யவில்லையெனப் பொருள். ஆகையால், அப்படிப்பட்டவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட இடமே ''நரகம்''.

''ஆனால், தேவன் உண்மையாகவே ஜனங்கள் நரகம் போவதை விரும்புகிறாரா?'' என அசிமா கேட்டாள்.

''இல்லை'' என்று பேதுரு பதிலளித்தார். I பேதுரு 3 : 9-ல் தேவன் ஒருவரும் கெட்டுப்போகாமல் இருக்கும்படியாய் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார் என்று சொல்லியுள்ளார். தேவன் எல்லா ஜனங்களுக்கும் தம்மைப் பற்றி அறிந்து கீழ்படிவதற்கு கால அவகாசத்தை கொடுக்கிறார். பரலோகத்திற்கு செல்லும்படியான வழியை ஒவ்வொருவரும் தெரிந்தெடுக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்.

''ஆனால் சாத்தானும் தன்னுடைய வேலையைச் செய்கிறபடியால், ஜனங்கள் அவனுக்குச் செவிகொடுக்கிறார்கள், குடித்தல், போதை வஸ்துக்கள், ஒழுக்கக் கேடான வாழ்க்கை, பொய், ஏமாற்று ஆகிய இவைகள் ''ஜாலி'' என நினைத்து விருப்பத்தோடு செய்கின்றனர். தேவனுக்குக் கீழ்ப்படிவதைக் குறித்து துளியும் அக்கறை காட்டுவதில்லை.

மீண்டும் அந்தோணி ஒரு கேள்வி கேட்டான். ''நரகம் என்பது அக்கினி எரிந்து கொண்டிருக்கும் இடம் தானா?" என்று.

தேவன் "பரலோகம்", "நரகம்" இவைகளைப் பற்றி விவரிக்கும் போது இந்தக் காட்சி மனிதனுக்குப் புரிகின்ற வகையில், அவனுக்குத் தெரிந்த வார்த்தைகளை உபயோகிக்க வேண்டி இருந்தது. பரலோ கத்தின் வீதிகள் சுத்தப் பசும் பொன்னால் ஆனது என்று சொல்லி யுள்ளார். அதிலிருந்து அது ஒரு அழகான, பூரணமான, நாம் கற்பனை செய்ய முடியாத இடம் என அறிகிறோம்.

மேலும் நரகத்தைப் பற்றிச் சொல்லும்போது, அது முடிவில்லாத எரிகிற • அக்கினியின் வேதனையைத் தரக்கூடிய இடம் என்று சொல்லும் பொழுது, தேவன் நரகத்தை மிக மோசமான பாடுகளைத் தரக்கூடிய இடம் என சித்தரிக்கிறார். அவருடைய எந்தவிதமான ஒளியும் அங்கே பிரகாசிக்காதாகையால் அது முற்றிலும் இருள் நிறைந்த பகுதி என்கிறார். எல்லா நன்மையானவைகளிலிருந்தும், அன்பானவைகளிலிருந்தும் என்றென்றும் பிரிக்கப்பட்டிருப்பது எவ்வளவு பயங்கரமானதென்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்!

" அங்கு கிடைக்கின்ற தண்டனை எப்படியிருந்தாலும், நரகம் என்பது பரலோகத்தைப் போலவே நித்தியமானது. நித்தியம் என்பதின் பொருள் அதற்கு கால எல்லை என்பது கிடையவே கிடையாது - முடிவேயில்லாதது".

"சரி, கடைசியாக ஜேம்ஸ் சொன்னான். எனக்கு "இரண்டு காரியங்கள் தெரியும்" "நான் என்றென்றும் தேவனோடு இருக்க விரும் புவதால் நான் பரலோகம் செல்ல விரும்புகிறேன். அடுத்து, நான் சாத்தானோடும் அவன் தூதனோடும் இருக்க விரும்பாததால் நான் நரகம் போவதையும் விரும்பவில்லை" என்று முடித்தான்.

தாய்மார்களே, நாமோ நம்முடைய அருமைச் செல்வங்களோ நரகம் போவதை விரும்புவோமா? மாட்டோம் தானே. அப்படியானால் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவோம். நம்முடைய பிள்ளைக ளுக்கு கீழ்ப்படிதலைக் கற்றுத் தருவோம்.

B.B. சோட்.

R.R. நாயகம்.

# போதிப்பவர்களின் நடத்தை . . . ?

"தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களின் நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்." (எபிரேயர் 13 :7).

## "ஒரு உதாரணம்"

**அப்போஸ்தலர் பவுல் போதகன் தீமோத்தேயுவுக்கு எழுதினார் :**

" . . . நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு". - (1 தீமோ. 4 : 12).

## 1. பேச்சு :

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக . . ." (கொலோ. 3 : 16).

" . . . விசுவாசத்திற்குரிய வார்த்தைகளில் . . . தேறினவனாக இரு . . ." - (1 தீமோ. 4:6).

" . . . உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக் கொள்ளுகிறவனாக இரு." தீத்து 1 : 9)

"அவருடைய வசனத்தைக் கைக் கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோம் என்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்". (1 யோவான் 2: 5).

## 2. நடத்தை :

" . . . பழைய மனிதனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளுங்கள்" (எபேசியர் 4 : 22- 24).

"உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கையெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்." (1 பேதுரு 2 : 12).

## 3. அன்பு :

"என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக் கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான் . . . ." - (யோவான் 14 : 21).

". . . உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்." (எபே. 5 : 25).

". . .சகோதரரிடத்தில் அன்பு கூருங்கள் . . ." (1 பேதுரு 2 : 17)

". . . பிறரிடத்தில் அன்பு கூருவாயாக . . ." (ரோமர் 13 :9)

". . . உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் . . ." (மத்தேயு 5 : 44)

## 4. விசுவாசம்

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்று . . . விசுவாசிக்க வேண்டும்." (எபிரேயர் 11 : 6).

". . . அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல் . . . தேவனை மகிமைப்ப டுத்தி, விசுவாசத்தில் வல்லவனாக இரு". (ரோமர் 4 : 20 - 24).

". . . மரணபரியந்தம் உண்மையாயிரு. அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்". (வெளி. 2 : 10).

## 5. பரிசுத்தம்

"ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களா கும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக் களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூருங்கள்." (1 பேதுரு 1 : 22)

". . . அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். அவர் மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கி றவன் எவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல, தன்னையும் சுத்திகரித்துக் கொள்ளுகிறான்." (1 யோவான் 3 : 2 - 3)

## "அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்"

அவர்கள் போதிக்கிறபடியே தாங்களும் நடக்க வேண்டிய ஒரு பெரும் பொறுப்பு போதகர்களுக்கு உண்டு. (மத். 23 : 3; ரோமர் 2 : 21. மேலும், கிறிஸ்துவின் நற்செய்தியை மட்டுமே போதிக்கவும், அதின்படி நடக்கவும் வேண்டிய ஒரு பெரும் பொறுப்பும் அவர்களுக்கு உண்டு. (கலா. 1 : 6 - 9). ஏனெனில், அவர்கள் தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். (யாக். 3 :1; மத். 12 : 36-37. பொறாமை, விரோதம், சுய நலம், கசப்பான வைராக்கியம் (யாக்கோபு 3 : 13-16) ஆகிய துர்க்குணங்களை விடுத்து, அன்பும், பொறுமையும், சாந்தமுள்ளவனாகவும், (2 தீமோ. 2: 24-25 இருந்து நீதியையும், தேவ பக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும் தொடர்ந்து கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டும். (1 தீமோ. 6 : 11).

### முடிவாக . . .

". . . உண்மையுள்ளவைகள் எவைகளோ ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார்." - (பிலிப்பியர் 4 : 8 - 9).

TIL

தமிழில் : எஸ். எஸ். ராஜன்

# கர்த்தரின் பந்தி

ஆராதனையின் மற்றுமோர் பகுதி கர்த்தரின் பந்தியாகும். மனிதன் மிகவும் மறதி படைத்தவன் என்பதை கிறிஸ்து அறிந்தார். எனவே, அவன் நினைவு கூரும்படியாக, அவனுக்கு உதவியாக இருக்கும் ஒன்றை விட்டுச் செல்ல அவர் விரும்பினார். இந்த நினைவு கூருதல் கர்த்தரின் பந்தி என அறியப்படுகிறது.

மேற்கொண்டு படிப்பதற்கு முன்பு, இது எவ்வாறு ஏற்படுத்தப் பட்டது என்பதை நாம் முதலில் பார்ப்போம். மத்தேயு 26 : 26 - 28 வசனங்களைப் பாருங்கள் : " அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு, சீடர்களுக்குக் கொடுத்து : நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயி ருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்கு கொடுத்து : நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக் கிறது". அது எவ்வளவு எளிமையாக இருந்தது என்பதைக் கவனி யுங்கள். அப்பமானது தமது சரீரத்தின் மாதிரியாக இருப்பதால், அதை தமது சரீரத்தின் நினைவாக உட்கொள்ள வேண்டும் என கிறிஸ்து குறிப்பிட்டார். பின்னர், திராட்ச ரசத்தை தமது இரத்தத்தின் மாதிரி யாகக் கருதி, அவருடையை இரத்தத்தின் நினைவாக பருக வேண்டும் என அவர் கூறினார். வேறு விதமாகக் கூறினால், சிலுவையில் தாம் அவர் களுக்காகப் படப்போகும் பாடுகளை தமது சீடர்கள் மறப்பதை கிறிஸ்து விரும்பவில்லை. எனவே தான் ஒவ்வொரு கர்த்தரின் நாளிலும் அவருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூரும்படியாக அவர்கள் அப்பத்திலும் இரசத்திலும் பங்கு பெறும் போது, அவருடைய பாடுகள் அவர்களின் மனதிலே புதிதாக நிலைத்திருக்கும்.

பவுல் கொரிந்து சகோதரர்களுக்கு எழுதுகிறார் : "நீங்கள் ஒரிடத்தில் கூடி வரும் போது, அவனவன் தன் தன் சொந்த போஜனத்தை முந்திச் சாப்பிடுகிறான்; ஒருவன் பசியாயிருக்கிறான்; ஒருவன் வெறியாயிருக்கிறான். இப்படிச் செய்கிறது கர்த்தருடைய இராப்போஜனம் பண்ணுதலல்லவே. புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனுடைய சபையை அசட்டை பண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? இதைக் குறித்து உங்களைப் புகழ்வேனோ? புகழேன். நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரி டத்தில் பெற்றுக் கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயி

ருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து : இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது, நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறார்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான். எந்த மனிதனும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜன பானம் பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத் தீர்ப்பு வரும்படி போஜன பானம் பண்ணுகிறான்.'' (1 கொரிந்தியர் 11 : 20 - 29).

இப்போது, கர்த்தரின் பந்தியை கொரிந்து சகோதரர்கள் நடத்தி வந்த விதத்தைக் குறித்து பவுல் ஆரம்பத்தில் அவர்களைக் கண்டிக்கிறார். கர்த்தர் கற்பித்தபடியாக அதில் பங்கு கொள்ளாமல், வயிறார சாப்பிட்டு, குடிக்கும் ஒரு விருந்தாக அவர்கள் அதை மாற்றிவிட்டிருந்தனர். கர்த்தரின் பந்தியின் நோக்கம் அதுவல்ல. மாறாக, அதனுடைய உண்மையான நோக்கம் என்ன என்பதையும், அதில் எப்படி பங்கு பெற வேண்டுமென்றும் அவர்களுக்கு அவர் காண்பித்தார். இந்தச் செய்தியை எல்லாம் கர்த்தரிடமிருந்து தாம் பெற்றுக் கொண்டதாகவும் பவுல் அவர்களுக்கு நினைப்பூட்டுகிறார். அவை :

1. கர்த்தர் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவில், இந்த பந்தியை அவர் ஏற்படுத்தினார்.
2. பிட்கப்படுகிற அப்பமானது தமது சரீரத்தை அவர்களுக்கு நினைப்பூட்டுவதாக இருக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.
3. அதுபோலவே இரசத்தையும் எடுத்து, அதை எல்லாரும் தமது இரத்தத்தின் நினைவாக பருக வேண்டுமென அவர் காண்பித்தார்.
4. அதில் பங்கு பெறும் போதெல்லாம், கர்த்தர் வருமளவும் அவரது மரணத்தை நினைவு கூருவதாகக் காட்டுகிறது.
5. இந்த பந்தியில் அபாத்திரமாக யாராவது பங்கு பெற்றால், கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்து அவன் குற்றமுள்ளவனாக இருப்பான்.
6. ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதித்தறிந்து இந்த பந்தியில் பங்கு பெற வேண்டும்.

7. அபாத்திரமாக இந்த பந்தியில் பங்கு பெறுபவர்கள் தங்கள் ஆத்துமாக்களுக்கு அழிவைத் தேடிக் கொள்ளுகிறார்கள்.

பவுல் கூறும் இந்த முக்கிய குறிப்புகளை நாம் மிகவும் கவனமாகக் கற்றுக் கொள்ள வேண்டும். பவுல் கூறும் இந்த முக்கிய குறிப்புகளை நாம் மிகவும் கவன்மாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நமது பாடத்தை தொடரும் போது, பல காரியங்களை நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் :

1. ஒரே ஒரு பாத்திரத்தில் மட்டுமே இரசத்தை பருகலாம் என கர்த்தர் போதிக்கவில்லை. சில வேளைகளில் மக்கள் அனைவரும் சேர்ந்து முடிவெடுத்து ஒரே பாத்திரத்தில் எல்லாரும் இரசத்தைப் பருகுகின்றனர். நல்லது, பாத்திரத்திலுள்ள பொருளுக்குத்தான் (திராட்ச ரசம்) கர்த்தர் முக்கியத்துவம் கொடுத்தாரே தவிர, பாத்திரத்திற்கு கர்த்தர் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கிறிஸ்துவின் இரத்தத்தை நினைவு கூரும் படி பங்கு கொள்ளுவது மட்டும்தான் முக்கியமே தவிர, பாத்திரம் ஒன்றா அல்லது அதிகமா என்பது பிரட்சனை அல்ல. ஒரே பாத்திரத்தில் பலரும் பருகுவது சுவிசேஷத்தின்படி தவறல்ல; என்றாலும் சுகாதார காரணத்திற்காகவும் பிற காரணங்களுக்காகவும் ஒவ்வொருவருக்கும் தனித்தனி சிறு பாத்திரத்தில் இரசத்தைக் கொடுப்பது நலமாயிருக்கும்.

2. கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுவதால், கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூருவதோடு கர்த்தரின் இரண்டாம் வருகையை விசுவாசிக்கும் ஒரு மக்கள் கூட்டம் இங்கிருக்கிறது என்பதை சகலருக்கும் நினைப்பூட்டும் ஒரு செயலாகவும் இருக்கிறது.

3. வாரந்தோறும் கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளும் போது, கடந்த வாரம் முழுவதும் ஒவ்வொருவரும் வாழ்வில் செய்த தவறுகளை நினைக்கவும், அல்லது கடந்த பல வாரங்களாக கர்த்தரின் பந்தியில் பங்கு பெறாவிடில் தன்னுடைய தற்போதைய ஆவிக்குரிய நிலைபற்றி சோதித்து, மனந்திரும்ப ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. தன்னால் முடிந்த வரையில் கர்த்தருக்கு விசுவாசமுள்ளவனாக வாழ்ந்திருப்பதாகக் கண்டால், பின் அவன் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுவது இயற்கையே. என்ற போதிலும், தனது வாழ்வில் பாவங்கள் இருப்பதாகக் கண்டால், முதலில் அவைகளுக்காக மனஸ்தாபபட்டு, திருந்தி கொள்ளும்போது கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுகிறான்.

4. பாத்திரமாக (தகுதியில்லாமல்) ஒருவன் கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றால், நித்திய இரட்சிப்புக்காக அப்பத்தில் புசித்து ரசத்தில் பானம் பண்ணுவதற்குப் பதிலாக, தனக்குத் தானே ஆக்கினையை

வரவழைத்துக் கொள்ளுகிறான். சந்தேகமின்றி, நாம் அனைவரும் பாவம் செய்கிறவர்களாக இருப்பதால் ஒருவருமே தகுதி பெற்றவர் அல்ல; என்றபோதிலும், நாம் பூரணமானவர்கள் அல்ல என கர்த்தர் அறிவார். எனவே, நம்மால் இயன்ற அளவு நாம் சோதித்து மனஸ்தாபப்படும் போது, கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ள ஊக்கப்படுத்தப்படுகிறோம். ஆனால் வேண்டுமென்றோ கவலையற்று அலட்சிய மாகவோ பாவம் செய்தால் அவன் கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ள தயாராக இல்லை. அப்படிப்பட்டவன் பங்கு பெறும் போது அவன் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளுவதோடு, பிறரும் அவனை சரியானவன் என நம்பும்படிச் செய்வதால், அவன் கர்த்தரின் பந்தியில் பங்கு பெறாமல் வீழ்ந்து போவதைக் காட்டிலும் அதிகமாக ஆக்கினைத் தீர்ப்படைகிறான். ஆனால் கர்த்தருக்குத் தெரியும். அவன் தனது வாழ்க்கையை திருத்திக் கொண்டால், ஆவிக்குரிய விதத்திலும் சுவிசேஷத்தில் கண்டபடியும் அதில் பங்கு பெறலாம்.

5. கர்த்தரின் பந்தியில் பங்கு பெற யாருக்கும் நாம் தடை விதிக்கக்கூடாது. எனவே, ஒரு சிலரை பந்தியில் அனுமதிப்பதும் சிலருக்கு அனுமதி மறுப்பதும் கூடாது. நம்மை நாமே சோதிக்க வேண்டும் என்ற அடிப்படையில், சுவிசேஷம் பந்தியில் கலந்து கொள்ள வழி செய்கிறது. சபையிலே அங்கத்தினரல்லாத ஒரு மனிதன் கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றாலும் ஆத்திரப்பட வேண்டாம். அவர் சத்தியத்தை அறியும் போது, தேவனுக்கு அவர் கீழ்ப்படிவார். கர்த்தரின் பந்தியில் பங்கு பெற அவருக்கு அனுமதி மறுத்தால், பின்னர் அவர் ஒருபோதும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போய்விடலாம்.

முடிவாக, ஆதிக் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள் அப்பம் பிட்கும் படி கூடி வந்தார்கள், என அப்போஸ்தலர் நடபடி 20 : 7ம் வசனத்தில் படிக்கிறோம். ஆகவே, நாமும் அவ்வாறே செய்ய வேண்டும். ஆனால் வாரத்தின் எந்த முதல் நாள்? வாரத்தின் ஒவ்வொரு முதல் நாளும் தான். ஒரு குறிப்பிட்ட வாரத்தின் முதல் நாளில் மட்டுமே கர்த்தரின் பந்தியில் பங்கு பெற வேண்டுமென உங்களுக்கு அல்லது எனக்கு அல்லது வேறு எவருக்காகிலும் அதிகாரம் கொடுத்தது யார்? ஒருவரும் அவ்விதமான அதிகாரத்தை அளிக்கவில்லை. எனவே, தேவன் எவ்வாறு செய்தாரோ அவ்வாறே நாமும் செய்வோம். அதாவது, அவரை ஆராதிக்க அவருடைய பிள்ளைகள் வாரத்தின் முதல் நாள் கூடி வந்தனர். கர்த்தரின் பந்தியும் இந்த ஆராதனையில் அடங்குகிறது.

**J.C. சோட்**

# விசுவாசத்தின் அடிப்படைகள் (பாடம்)

## மாணவர் விளக்க உரை - பாடம் - 1

ஆவிக்குரிய உலகில் நம்முடைய அதிகாரம் எங்கிருந்து வருகிறது?

அ) அதிகாரம் என்றால் என்ன?

அதிகாரத்தின் மூலம் கீழ்ப்படுதலைக் கொண்டுவரக் கூடிய உரிமை.

ஆ) ஆகவே, எல்லா மனிதரிலும் யாருக்கு கீழ்ப்படிதலைக் கட்டளையிடக் கூடிய உரிமை இருக்கிறது?

நாங்கள் மிகுந்த நம்பிக்கையோடே தேவன் ஒருவருக்கே அந்த அதிகாரம் உண்டென்று சொல்கிறோம்.

ஏன்? தயவு செய்து பின்வரும் காரணங்களை சிந்தித்துப் பாருங்கள்.

1. ஆதியாகம் 1 : 1 - சிருஷ்டிகர்
2. சங்கீதம் 90: 2 - நித்தியமானவர்
3. ஆதியாகமம் 1 - இந்த அதிகாரத்தில் ஒன்பது முறை. தேவன் சொன்னார் என்றும், ஒவ்வொரு முறையும் அது அப்படியே ஆயிற்று. அது நல்லது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. உதாரணமாக 1, 3, 4. அந்தப்பிரகாரம், அவர் சர்வ வல்லவராக இருக்கிறார்.
4. ஆதி 1 : 27 - 2 : 7 மனிதன் தேவனிடமிருந்து வந்தான். அவருக்கே கடமைப்பட்டவன்.
5. எபிரேயர் 1 : 3 அவர் எல்லாவற்றையும் தன் முழு கட்டுபாட்டில் வைத்திருக்கிறார்.

இ) பிதாவாகிய தேவன் அந்த அதிகாரத்தை இயேசுவுக்குக் கொடுத்தார்

1. மத்தேயு 17 : 5, 28 : 18
2. இயேசுவைப் பார்த்து அவருடைய உவார்த்தையைக் கேட்டவர்கள் அவருடைய அதிகாரத்தை கண்டு கொண்டார்கள்.
3. இயேசு பேசிய வார்த்தைகளும், போதித்த போதனைகளும் தேவ மத் 28 : 18 ன் வார்த்தைகளும் போதனைகளுமே.
4. மத்தேயு - 28 :18

ஈ) இயேசு இந்த பூமியை விட்டுப்போகுமுன் அந்த அதிகாரத்தை தம் அப்போஸ்தலர்களிலிருந்து அந்த அதிகாரத்தை நிறைவேற்றும்

வல்லமையைப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பி நிறைவேற்ற வாக்குத்தத்தம் பண்ணினார்.

1. மத்தேயு 2 : 18 - 20
2. யோவான் 16 : 13

(2)

3. அப்போஸ்தலர் 1 : 8
4. அப்போஸ்தலர் 2 : 1-4

உ) அந்த அதிகாரத்தை அப்போஸ்தலர்களும் தேவனால் ஏவப்பட்ட மற்ற மனிதர்களும் பயன்படுத்தினார்கள். அதற்கு தேவனே சாட்சியாக இருந்தும், இவர்கள் மூலம் அற்புதங்களை நடப்பித்தார். (அவர்களுடைய செய்திகள் அவரிடமிருந்து வந்தது என்று உறுதிப்படுத்தினார்)

1. எபிரேயர் 2 : 3, 4.

ஊ) இந்த முறையின் முடிவாக தேவனால் ஏவப்பட்ட மனிதர்கள் தேவனுடைய வார்த்தையைப் பேசி பதிவு செய்தார்கள். அதாவது தேவனுடைய சித்தத்தை.

1. 1 கொரிந்தியர் 2 :9 -13
2. 1 தெசலோனி. 2 : 13
3. 1 கொரிந்தியர் 14 : 37

எ) பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்ட இந்த மனிதர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்ட இந்த தேவ வார்த்தை அதாவது பைபிள் முழுமையானதும் முற்றிலும் போதுமானதுமாக இருக்கிறது. இதற்கு மேல் எந்த வெளிப்பாட்டுக்கும் அவசியமில்லை. உண்மையாக தேவனிடமிருந்து அவருடைய வார்த்தையோடு எதையும் கூட்டவோ அதிலிருந்து எதையும் கூடாதென்பதற்கான எச்சரிக்கைகள் வேதத்தில் உள்ளது.

1. 1 யோவான் 16 : 13
2. 2 பேதுரு 1 : 3, 4
3. யாக்கோபு 1 : 25
4. யூதா 3
5. உபாகமம் 4 : 2, 12 : 32
6. வெளிப்படுத்தின விசேஷம் 22 : 18, 19.

ஏ) 'பைபிள்' தேவனால் ஏவப்பட்ட வார்த்தை என்று சொல்லுவதின் அர்த்தம் என்ன?

1. 'ஏவப்பட்ட' என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?

2. பைபிள் தேவனால் கொடுக்கப்பட்டதா?

1. 2 தீமோத்தேயு 3 : 16
2. எரேமியா 1 :9
3. 2 பேதுரு 1 : 21

3. முடிவுரை :

அ) பிதாவாகிய தேவன் ஆவிக்குரியதிலும் மற்ற எல்லாவற்றிலும் மேலான அதிகாரமுடையவர்.

ஆ) அந்த அதிகாரத்தை பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரன் இயேசு கிறிஸ்துவிடம் கொடுத்தார்.

இ) கிறிஸ்து தன் பிதாவாகிய தேவனுடைய வார்த்தைகள் அவருடைய அப்போஸ்தலர்களிடமும் ஏவப்பட்ட மற்ற மனிதர்களிடமும் அவருடைய வார்த்தையைப் பேசவும், எழுதி வைக்கவும், அதிகாரம் கொடுத்தார். அவர்கள் அப்படிச் செய்வதற்கு பரிசுத்த ஆவியானவரை அவர்கள் மீது அனுப்பி அவர்களுக்கு வல்லமையைக் கொடுத்தார்.

ஈ) அதனுடைய பலன்தான் பைபிள். தேவனுடைய வார்த்தைகள் தான் பிறகு ஆவிக்குரிய சகலத்திற்கும் அளவு கோலாக இருக்கிறது.

4. வேதத்தைப் பற்றிய சுய சாட்சியைக் காட்டிலும் அது தேவனுடைய ஏவப்பட்ட வார்த்தைதான் என்பதற்கு வேறு ஏதாவது காரணங்கள் இருக்கிறதா?

1. ஆச்சரியப்படத்தக்க அளவில் வேதத்தைப்பற்றிய இந்த அபாரமான உண்மைகளை எண்ணிப் பாருங்கள்.

அ) 66 புத்தகங்கள்

ஆ) வித்தியாசமான கால கட்டங்களில் வாழ்ந்த, பல பின்னணிகளை கொண்ட சுமார் 40 ஆசிரியர்கள்

இ) 1600 வருடங்களுக்கு மேலாக எழுதப்பட்டது.

ஈ) மூன்று வித்தியாசப்பட்ட பாஷைகளில் எழுதப்பட்டது. எபிரேயு, அராமிக், கிரேக்கு.

2. ஆயினும் மனுக்குலத்தின் இரட்சிப்பு என்கிற ஒரே மையக் கருத்தில் முரண்பாடோ சிக்கலோ இல்லை. இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மனிதனின் இரட்சிப்பும் தேவன் மகிமைப்படுவதும்.

3. எந்தவித மேற்பார்வையுமின்றி 40 இசை வல்லுநர்கள் ஆயிரக்கணக்கான வருடங்கள் தனித்தனியே அமைக்கப் பட்ட இன்சையை ஒற்றுமையாக வாசித்தால் எப்படியிருக்கும் நினைத்துப்பாருங்கள்.

ஐ) முன்னுரைக்கப்பட்டு பல நூற்றாண்டுக்குப்பின் முழுமையாக சரியாக நிறைவேறிய தீர்க்க தரிசனங்கள். மனிதர்களால் ஒரு போதும் செய்ய முடியாதவுன்று. இது நிச்சயமாகவே தேவன் வேதாகமத்தை எழுதியதற்கு ஒரு அடையாளம்.

1. உதாரணமாக சிலர் கிறிஸ்துவைக் குறித்தும் அவருடைய இராஜ்ஜியத்தைக் குறித்தும், அவர் இப்பூமிக்கு வருமுன்பே பழைய ஏற்பாட்டில் 456 முறை முன்னுரைக்கப்பட்டுள்ளது என்று கணக்கிட்டுள்ளனர்.

2. இந்த எடுத்துக்காட்டுகளை எண்ணிப் பாருங்கள்.

தீர்க்கதரிசனம் பழைய ஏற்பாடு

நிறைவேறுதல் புதிய ஏற்பாடுகள்.

| | | | |
|---|---|---|---|
| (1) | மேசியாவைப் பற்றிய முதல் வாக்குத்தத்தம் | ஆதி 3 : 15 | கலாத் 4 : 4 |
| (2) | யூதா கோத்திரத்தில் பிறந்தவர் | ஆதி 44 : 10 | வெளி 5 : 5, எபி 7. 74 |
| (3) | கன்னியின் வயிற்றில் பிறப்பார் | ஏசாயா7 : 14 | மத் 1 : 23 |
| (4) | பெத்லேகேமில் பிறப்பார் | மீகா 5 : 2 | மத். 2 : 1 - 6 |
| (5) | துக்கம் நிறைந்தவர் அசட்டைப் பண்ணப்பட்டவர் புறக்கணிக்கப்பட்டவர் | ஏசா 53:2, 3 | மத்.27: 30, 31 |
| (6) | மற்றவர்களின் பாவங்களை சுமப்பார் | ஏசா 53: 5, 6 II | 1 பேதுரு 2 : 4, II கொ 5 : 21 |
| (7) | ஒரு நண்பனால் காட்டிக் கொடுக்கப்படுவார் | சங். 41 : 9 | மாற் 14 : 10, 11 |
| (8) | முப்பது வெள்ளிக் காசுக்காக காட்டிக் கொடுக்கப்பட்டார் | சகரியா 11 : 12, 13 | மத் 26 : 15 |

ஒ) பாகுபாடின்மை :

1.விலக்கியோ மனிதர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் கருப்பொருளின் தன்மையை மேம்படுத்தியோ அல்லது தீமையை

உறுதிப்படுத்தியோ எழுதப்படும். இரண்டையும் ஒரு போதும் ஒன்று சேர்த்து எழுதமாட்டார்கள்.

**உ. இதை பைபிளோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.**

அ) நோவா - நீதியைப் பிரசங்கித்தவர், ஆனால் மது மயக்கத்திலும் இருந்தவராக காட்டப்பட்டுள்ளார்.

ஆ) தாவீது - தேவனுடைய இருதயத்துக்கேற்ற மனுஷன், ஆனால் கொலை விபச்சாரம் பாவங்கள் குற்றமுள்ளவனாகவும் காட்டப்பட்டுள்ளார்.

இ) ஆபிரகாம் - தேவனிடத்தில் ஆழமான விசுவாசம் ஆனால் பார்வோனிடம் பொய் சொன்னார்.

ஈ) பேதுரு - மிகப்பெரிய விசுவாசமும் சக்தியும் இருந்தது. ஆனால் மூன்றுதரம் கிறிஸ்துவை மறுதலித்தார் தேவன் பட்சபாதமற்றவர். ஆகவே நல்லது தீயது ஆகிய இரண்டையும் உரைத்தார்.

தமிழில் : G. டேனியல், சென்னை

---

## தேவனுடைய விருப்பம்

எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

தீமோ 2:4

# மனச்சாட்சி என்றால் என்ன?

மனச்சாட்சி பற்றி சுவிசேஷம் பல இடங்களில் பேசுகிறது. விபச்சாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு பெண்ணை வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவிடத்தில் கொண்டு வந்த ஒரு கதை : மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படி, அப்பெண் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டியவளாக இருந்தாள். இயேசு அவளை விடுவித்து விடக் கூடும் என்றும், பின்னர் நியாயப் பிரமாணத்தை அவர் மீறிவிட்டார் என அவர் பேரிலே குற்றஞ் சுமத்தலாம் என்றும், ஒரு வேளை அவர்கள் எண்ணினார்கள். ஆனால், இயேசுவோ குனிந்து, தரையிலே விரலினால் எழுதினார். பின்னர், "உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக் கடவன்" என்று அவர் சொன்னார். சுவிசேஷம் தொடர்ந்து கூறுகிறது : "அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப்பட்டு,பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவிலே நின்றாள். இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத் தவிர வேறொருவரையுங்காணாமல் : ஸ்திரீயே, உன் மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார். அதற்கு அவள் :இல்லை ஆண்டவரே, என்றாள். இயேசு அவளை நோக்கி : நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீபோ, இனிப்பாவஞ் செய்யாதே என்றார்".(யோவான் 8 : 7 - 11).

எருசலேமிலே, கிறிஸ்தவத்தின் எதிரிகள் பவுலைக் கொலை செய்வதற்காக முயற்சிக்கும்போது, ரோமப் போர்ச் சேவகர்களால் காப்பாற்றப்படுகிறார். அந்தக் கூட்டத்திடமும், ரோமச் சேனாபதியிடமும் தனக்காகப் பவுல் பேசிய பின்பு, பிரதான ஆசாரியரும் ஆலோசனை சங்கத்தாரும் கூடி வரும்படி கட்டளையிடப்பட்டனர். "பவுல் ஆலோசனைச் சங்கத்தாரை உற்றுப்பார்த்து:சகோதரரே, இந்நாள் வரைக்கும் எல்லா விஷயங்களிலும் நான் நல்மனச்சாட்சியோடே தேவனுக்கு முன்பாக நடந்து வந்தேன் என்று சொன்னான்".(அப். 23 : 1). கர்த்தரின் மக்களைத் துன்புறுத்தியவர்களில் முன்பு பவுலும் ஒருவராக இருந்தார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இப்போதோ அவருடைய சொந்த யூத சகோதரர்களால் அவர் துன்புறுத்தப்பட்டுக் கொண்டிருந்தார். என்றாலும், எல்லா காலத்திலும் தான் செய்தவைகள் அனைத்தையும் நல் மனச்சாட்சியோடே செய்ததாக அவர் அறிவித்தார்.

ரோமர் 9 : 2ம் வசனத்தில் பவுல் கூறினார் : "நான் சொல்லுகிறது பொய்யல்ல, கிறிஸ்துவுக்குள் உண்மையைச் சொல்லுகிறேன் என்று பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது." நமது அரசுக்குக் கீழ்ப்படிவதைப் பற்றி அவர் கூறுகிறார் :

"ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச்சாட்சியின் நிமித்தமும் கீழ்ப்படிய வேண்டும்". (ரோமர் 13 : 5). 1 கொரிந்தியர் 8 : 7ம் வசனத்தில், பலவீனமான மனச்சாட்சி உள்ளவர்களைப் பற்றி அவர் பேசுகிறார். பின்னர், 1 தீமோத்தேயு 4 : 1ம் வசனத்தில், சூடுண்ட மனச்சாட்சி அல்லது செத்துப் போன மனச்சாட்சி பற்றி பேசுகிறார். ஏனெனில், ஒருவன் சரி அல்லது தவறு என அறிந்தும் பலமுறை அதற்கு எதிராக நடக்கிறான். தீத்து 1 : 15 வசனத்தில் அசுத்தமான மனச்சாட்சி, அதாவது தவறையும் சத்தியத்தையும் கலந்து, தனது எண்ணத்திலும் வாழ்க்கையிலும் கடைபிடிப்பவனின் மனச்சாட்சி பற்றி கூறுகிறார்.

சுவிசேஷத்தில் மனச்சாட்சி பலமுறைகள் பேசப்படுகிறதையும், வித்தியாசமான பல நிலைகளில் அது இருப்பதாக வர்ணிக்கப்படுவதையும் இந்த வசனங்களிலிருந்து நீங்கள் காணமுடியும். ஆனால், மனச்சாட்சி என்றால் என்ன? இருதயம், மனது, ஆத்மா இவற்றோடு அது சம்பந்தப்பட்டிருப்பதாக அகராதி சொல்லுகிறது. ஒன்றை நம்புவது அல்லது நம்பாமல் இருப்பது அல்லது ஒன்றைச் செய்வதும், செய்யாமலிருப்பதற்கான முடிவை அல்லது தீர்ப்பை எடுக்க, நமது குழந்தைப் பருவத்திலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக விருத்தியடைந்துள்ள அறிவை சார்ந்திருப்பதுவே மனச்சாட்சி எனப்படுகிறது. மதக் காரியங்கள் உட்பட சகல காரியங்களும் ஒருவனுடைய சொந்த மனச்சாட்சியின் உணர்ச்சிகளுக்கு விரோதமாக இல்லாமலிருந்தால் சரி என வாதிடுவோரும் பலர் உள்ளனர். என்ற போதிலும், இந்தக் காரணத்தில் ஒரு தவறு உள்ளது. என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எந்த அறிவின் அடிப்படையில் அது அமைக்கப்பட்டுள்ளதோ, அதற்கேற்ப மனச்சாட்சி ஒன்றை ஏற்பதும், மறுப்பதும் நடைபெறுகிறது. ஒரு மனிதனுக்கு அவனது வாழ்நாள் முழுவதும் ஒரு பொய்யை உண்மை எனக் கற்றுக் கொடுத்தால், அதை சரி என அவனுடைய மனச்சாட்சி ஏற்றுக் கொள்ளுகிறது. உதாரணமாக, "விசுவாசம் மட்டுமே" ஒருவனை இரட்சிக்கிறது என ஒருவனுக்குக் கற்றுக் கொடுத்தால், அந்தக் கோட்பாடு சம்பந்தமாக அவனுக்கு ஒரு நல்ல மனச்சாட்சி இருக்கும். எல்லா சபைகளும் ஒன்றே என்று ஒருவனுக்கு உபதேசிக்கப்பட்டால், நல்ல மனச்சாட்சியுடன் அவனே அதே காரியத்தை பிறருக்குப் போதிப்பான். இதே போன்று தான் எல்லா காரியங்களையும் மனச்சாட்சி ஏற்றுக்கொள்ளுகிறது. வேறுவிதமாகச் சொன்னால், ஒருவனுக்கு எது போதிக்கப்பட்டிருக்கிறதோ அல்லது எதை விசுவாசிக்கிறானோ அதின் அடிப்படையிலேதான் அவனுடைய மனச்சாட்சி ஏற்றுக் கொள்ளுவதும் ஏற்க மறுப்பதும் அமைகிறது.

சுவிசேஷ அறிவில் ஒருவன் நல்ல மனச்சாட்சியை உடையவனாக இருக்க வேண்டுமானால், அவனுடைய மனச்சாட்சி தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவைப் பெற்றிருக்க வேண்டும். பின்னர் அந்த அறிவோடு செயல்படும் போது அவன் சரியான காரியத்தைச்

செய்திருப்பதாக அவன் மனச்சாட்சி ஏற்றுக் கொள்ளுகிறது. தேவனுடைய கட்டளைகளைப் பற்றிய அறிவில்லாத மனச்சாட்சியுடையவனா இருப்பவன், "நல்ல மனச்சாட்சி"யுடன் இருந்த போதிலும், தான் செய்வதை நம்பிக்கையோடு செயல்படுத்துவதில் அவனுடைய மனச்சாட்சி தவறான வழியில் அவனை இட்டுச் செல்லுகிறது.

உதாரணமாக, பேதுரு சொன்னார் : "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது, (மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல் மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து) இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது." (1 பேதுரு 3:21). சந்தேகமின்றி, தேவனுடைய விருப்பத்தை ஒருவன் அறிகிற அறிவின் அடிப்படையில், அதாவது தேவனை விசுவாசித்து, அவனுடைய பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என அறிக்கை செய்து, இன்னும் பல சுவிசேஷ வசனங்கள் கூறுபவைகளைக் கடைபிடித்து, ஒருவன் இரட்சிக்கப்பட வேண்டி திருமுழுக்குப் பெறுகிறான் என பேதுரு கூறுகிறார். சரீரத்தின் அழுக்கு நீங்க குளிப்பது திருமுழுக்கு அல்ல; மாறாக, தேவனோடு நல்மனச்சாட்சியுடையவனாக ஒருவன் இருக்கவே திருமுழுக்கும் பெறுகிறான். கர்த்தர் விரும்புவதை என்னவென்று ஒருவன் அறிந்தும், பின்னர் தேவனுடைய கட்டளைகளை அவன் கடைபிடிக்காவிட்டால், எப்படி ஒரு நல்ல மனச்சாட்சியுடையவனாக அவன் இருக்க முடியும்?

வேறு விதமாகக் கூறினால், மது அருந்துவது, திருடுவது அல்லது பிற கெட்ட செயல்களைச் செய்வது தவறு என்று ஒருவனுக்குக் கற்பிக்கப்பட்டு, பின்னரும் அந்தத் தவறுகளை அவன் செய்வானாகில், அவனுக்குக் கற்பிக்கப்பட்டவைகளுக்கு மாறாக அவன் போய்க் கொண்டிருக்கிறான் - அவனுடைய மனச்சாட்சிக்கு விரோதமாகச் செல்லுகிறான், அது அவனைக் கண்டித்து குற்ற உணர்வை ஏற்படுத்துகிறது. இவ்வழியில் கெட்ட நடத்தைக்கு விரோதமான ஒரு பாதுகாப்பாக மனச்சாட்சி இருக்கக்கூடும். மறுபக்கத்தில், ஒருவன் நல்ல காரியங்களைச் செய்ய அது ஊக்குவிக்கிறது.

ஆனால் மீண்டும் ஒன்றை உறுதியாகச் சொல்லுகிறேன். ஆவிக்குரிய காரியங்களில், ஒருவனுடைய மனச்சாட்சி தேவனுடைய வார்த்தைக்கு இறங்கியிருக்கும் வேளை மட்டுமே, ஒருவன் தனது "மனச்சாட்சியைப் பின்பற்ற வேண்டிய" சரியான தருணம் ஆகும். அந்த ஞானம் இல்லையென்றால், மனச்சாட்சி அவனுடைய செயல்களை ஏற்றுக் கொண்ட போதிலும், அது அவனை தவறான பாதையில் நடத்திச் செல்லும். ஏமாற்றப்பட அனுமதிக்காதீர்! தேவன் உங்களிடம் எதை எதிர்பார்க்கிறார் என அறிய வேதாகமத்தைப் படியுங்கள். அதைச் செய்தால் மட்டுமே, நீங்கள் ஒரு நல் மனச்சாட்சி உடையவராக இருக்க முடியும்; மற்றபடி அல்ல.

எஸ். எஸ். ராஜன்.

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM** : Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, மே - 1996
மே THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

# -:அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ, Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivored Please return to
The Editor phone : (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER BOOK - POST